


நல்லவே எண்ணல் வேண்டும்.. எண்ணிய முடிதல் வேண்டும்..

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 118 | 23.10.2025 | THURSDAY | IPPASI : 6 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 118 | 23.10.2025 | வியாழக்கிழமை | ஐப்பசி : 6 | விலை : ரூ.5/-

3 நெல் மூட்டைகள் தேங்க மத்திய அரசின் காலதாமதமே காரணம்: தஞ்சையில் அமைச்சர் சக்கரபாணி விளக்கம்

4 சென்னை விமான நிலையத்தில் பட்டாசு புகை சூழ்ந்து 15 விமானங்களில் சேவை பாதிப்பு

2 'டெல்டா விவசாயிகளுக்கு இது கண்ணீர் தீபாவளி' தஞ்சையில் கள ஆய்வு செய்த இபிஎஸ் ஆதங்கம்

# வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள்: சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் உதயநிதி ஆய்வு

சென்னை: அக்.23-

சேப்பாக்கம் ஸ்ரீ திருவல்லிக்கேணி சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழையையொட்டி அமைக்கப்பட்டுள்ள மைய சமையல் கூடம் மற்றும் தற்காலிக நிவாரண மையங்களில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து அதிகாலையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், வடகிழக்கு பருவமழையை ஒட்டி அமைக்கப்பட்டுள்ள மைய சமையல்



கூடம் மற்றும் தற்காலிக நிவாரண மையங்களில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து இன்று அதிகாலையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இன்று அதிகாலையில் சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட திருவல்லிக்கேணி வெங்கட்ரங்கம் தெருவில் செயல்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள மைய சமையல் கூடம் மற்றும் தற்காலிக நிவாரண மையம் ஆகியவற்றில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, சிந்தாதிரிப்பேட்டை அய்யா தெருவில் உள்ள மைய சமையல் கூடத்தில் உணவு தயாரிக்க தேவையான கட்டமைப்பு வசதிகள் தயார் நிலையில் இருப்பதையும், சிந்தாதிரிப்பேட்டை மேற்கு கூவம் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையத்தில் பொதுமக்கள் தங்குவதற்கு தேவையான பாய், தலையணை உள்ளிட்டவை தயாராக இருப்பதையும், அடிப்படை வசதிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதிக்குட்பட்ட அண்ணாசாலை ஜி.பி.சாலை சந்திப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மழைநீர் வடிகால் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்யும் கனமழையை பொதுமக்கள் எதிர்கொள்ளத் தேவையான உதவிகளையும், பணிகளையும் அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தினார். இவ்வாறு கூறப்பட்டுள்ளது



## திமுக கூட்டணியில் தான் நீடிக்கிறோம் சட்டமன்றத் தேர்தலில் ஐந்து தொகுதிகளை கேட்போம்

### இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர்மொய்தீன்

திருச்சி, அக்.23

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொய்தீன் இன்று அவரது இல்லத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

தமிழக அரசு சார்பில் என்னை கௌரவித்தது தமிழ் சார் விருது வழங்கப்பட்டுள்ளது.அதற்கு தமிழக முதல்வருக்கும், தமிழக அரசுக்கு நன்றி செலுத்துகிறேன்.

தமிழகத்தில் இது பல்வேறு நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

2026 ம் ஆண்டு நடை பெறக்கூடிய தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பல்வேறு அரசியல் யூகங்களும், அரசியல் எதிர்பார்ப்பவர்கள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது. இந்த சூழ்நிலையில் தமிழகத்தில் உள்ள திராவிட மாடல் அரசு தமிழகத்தில் இதுவரை செய்த நல்ல காரியங்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2026 ல் மீண்டும் திமுக ஆட்சி அமைக்கும்.

இந்தியா, இலங்கை ஒரு உணர்வுகளாக இருக்க வேண்டும்.

இலங்கைக்கு இந்திய அரசு உதவிகள் செய்து வருகிறது. தமிழக மீனவர்களை காக்கும் வகையில் புதிய திட்டத்தில் அமல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தேன். இந்தோ இலங்கை ஸ்ரீலங்கா பிஷரீஸ் கார்ப்பரேஷன் என்ற ஒரு அமைப்பு உருவாக்க வேண்டும் அது அவர்களை உறுப்பினர்கள் சேர்த்து கச்சத்திவில் மீன் பிடிக்க உரிமையை வழங்க வேண்டும்.

திராவிட முன்னேற்ற கழகத்துடன் தொடர்ந்து கூட்டணி என்பது கொள்கை ரீதியானது. திராவிட முன்னேற்ற கழகத்திற்கு கூட்டணியை விட்டு வேறு கூட்டணி சிந்திப்பதே கிடையாது.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 5 தொகுதிகள் வழங்க வேண்டும் என்பது பொதுவான கருத்து நிலவுகிறது.

அதன்படி திருச்சி, சென்னை, கடலூர், நெல்லை, தஞ்சை எதிர்பார்க்கிறோம். தமிழக அரசு பாரதிய ஜனதா கொண்டு வந்துள்ள புதிய தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துவிட்டது.ஜி எஸ் டி டிகொள்கை குறித்து அனைத்து மாநிலம் குறித்து ஆலோசனை கேட்டார்கள். அதில் சிரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனை நாடு வரவேற்றுள்ளது.

ஜி எஸ் டியில் நடைமுறைப்படுத்திய ஆலோசனையின் படி உங்க திட்டத்தில் கொள்கைகளும் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும் அறிவித்தால் நன்றாக இருக்கும் இதை நான் வரவேற்கிறேன்.

குடந்தையில் மஹல்லா ஜமாத் நிர்வாகிகளை ஒருங்கிணைத்து டிசம்பர் 28ந் தேதி மாநாடு நடைபெற உள்ளது. ஜனவரி 8ந்தேதி கேரளா இஸ்லாமிய கலாச்சார அமைப்பு சார்பில் மும்மத திருமணம் திருச்சியில் நடைபெற உள்ளது.

வருகிற சட்டமன்றத் தேர்தலில் சீமான் தனியாக நிற்கிறார் வேட்பாளர் அறிவித்து வருகிறார். தமிழகத்தில் மூன்று அணியாக போட்டியிருக்கும். அதிமுக, பா.ஜக, த வெக மூன்று ஒன்றிணைந்தால் திமுக சவாலாக இருக்குமா என்று கேட்டதற்கு தேர்தலே சவாலாக இருக்கும்.

மக்கள்தான் எஜமானர்கள். திராவிட மாநில அரசுக்கு மக்கள் வெற்றியை தேடித் தருவார்கள் இது யுகம் அல்ல, நம்பிக்கை.

இவ்வாறு காதர் மொய்தீன் கூறினார்.

பேட்டியின் போது இந்திய யூனியன் முஸ்லிம் மாநில செயலாளர் ஆடுதுறை ஷாஜஹான், மாநில துணைச் ஹாஜி வி. எம். பாரூக், திருச்சி தெற்கு மாவட்ட யூத் லீக் மாவட்டவர் அஜீம், திருச்சி தெற்கு மாவட்ட யூத் லீக் மாவட்ட செயலாளர் மைதீன் அப்துல் காதர், மாநில மகளிர் அணிசெய்லாளரும், ஆடுதுறை பேரூராட்சி கவுன்சிலர் ஷமீம் நிஷா, திருச்சி தெற்கு மாவட்ட மகளிர் அணி தலைவி ஆரிபா, மாநில அயலக அணியின் துணைத்தலைவர் என். கே. அமீருதின், திருச்சி தெற்கு மாவட்ட ஆலோசனை குழு உறுப்பினர் ஆட்டோ அப்துல் சலாம், திருச்சி தெற்கு தொண்டரணி தலைவர் காஜா அலாவுதீன், கே. எம். சி. சி. நிர்வாகி அப்துல் சமது உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



## கண்டா வரச் சொல்லுங்க.. திருப்பூர் கலெக்டரை கையோடு கூட்டி வாருங்க : நல்லாற்றை கவனிக்க நாதியில்லை சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் ஆவேசம்

### உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு மாறாக எந்த வித அனுமதியும் பெறாமல் நல்லாற்றின் குறுக்கே கட்டிடங்கள் கட்டுவது எந்த வகை நியாயம்

பூண்டி, அக்.23-

திருமுருகன் பூண்டி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கடந்த ஓராண்டுக்கு முன்பாக, பூண்டி நல்லாற்றை தூர்வாரி சுத்தம் செய்து தர வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் மற்றும் பொதுப்பணித்துறை ஆகியோருக்கு மனு வழங்கப்பட்டது.

அந்த மனுவிற்கு பதில் அனுப்பிய பொது பணித்துறை அதிகாரிகள், திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும், போதிய நிதி ஆதாரங்கள் உருவாக்கப்பட்டவுடன் அதற்கான பணிகள் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டது.

அதன் பிறகு பலமுறை மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை தூர் வாருவதற்கான எந்த




நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதற்கிடையில் தமிழகம் முழுவதும் உள்ள நீர் நிலை ஆக்கிரமிப்புகள் அகற்றவேண்டும் என்ற உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்து பூண்டி அனணப்புதூர் மற்றும் செல்வார் டிரம்மர் கோவில் வடபுறம் குடியிருந்த குடிசை வீடுகள் அனைத்தும் அகற்றப்பட்டது.

குடிசைகளைக்கூட நீர் வழிப் பாதை ஆக்கிரமிப்பு என்று அகற்றி விட்டு தற்போது நகராட்சி நிர்வாகம் நல்லாற்றின் குறுக்கே கிட்டத்தட்ட சுமார் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்ய தொட்டி கட்ட, உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு மாறாக பொதுப்பணித்துறை யிடமோ, நீர்வளத்துறையிடமோ, தமிழக அரசிடமோ எந்த வித விதமான அனுமதியும் பெறாமல் கட்டிடங்கள் கட்டுவது எந்த வகை நியாயம் என்று தெரியவில்லை.

சிபிஎம் சார்பில் பல்வேறு கட்ட போராட்டங்களுக்கு பிறகு தற்போது பூண்டி நகராட்சி கமிஷனர் கட்டிடங்கள் கட்ட அனுமதி வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மனு அளித்திருப்பதாக செய்தி வெளி யிட்டுள்ளதன் மூலம், அரசின் எந்த அனுமதியும் பெறாமல் சுமார் 15 கோடி ருபாய் மதிப்பிலான திட்டம் நடைபெற்றுக்கொண்டுள்ளது என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது என சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆவேசம் அடைந்துள்ளனர். திருப்பூர் மாவட்ட கலெக்டர் அவர்கள் இதனை நேரடி ஆய்வு செய்து, நல்லாற்றைக் காப்பாற்ற வழிவகை செய்ய வேண்டும் என்பது அனைவரின் ஒருமித்த கருத்தாக உள்ளது.

## வழக்கறிஞருக்கு அரிவாள் வெட்டு சம்பவம் : திருச்சியில் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்

திருச்சி, அக்.23

திருச்சி வரகனேரி பகுதியை சேர்ந்த அழகேசன்மற்றும் அவரது சகோதர் உமா சங்கர். இவர்கள்ப2 பேரும்கடந்த சில நாட்களுக்கு முன்பு ரவுடி கும்பலால் அரிவாளால் வெட்டப்பட்டனர். இந்த சம்பவத்தில் உமா சங்கர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

அழகேசன் படுக்காயத்துடன் திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனைகள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

படுகாயம் அடைந்த அழகேசன் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில் தாக்கி கொலை செய்ய முயற்சித்தவர்களை




குண்டர் சட்டத்தில் கைது செய்ய வலியுறுத்தியும் வழக்கறிஞர்களுக்கு பாதுகாப்பு அளிக்க பட்டியல்கள் பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திருச்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அருகே தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் கூட்டு நடவடிக்கை குழு சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் கூட்டு நடவடிக்கை குழு பொதுச்செயலாளர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார் ஆர்ப்பாட்டத்தில் திருச்சிராப்பள்ளி செயலாளர் சி முத்துமாரி வரவேற்றார்.

இதில் பார் கவுன்சில் உறுப்பினர் ராஜேந்திர குமார் துணைத்தலைவர் வடிவேல் சாமி மற்றும் குற்றவியல் வக்கீல்கள் சங்க தலைவர் முல்லைசுரேஷ், துணை தலைவர்கள் வரகனேரி சசிகுமார் பிரபு பொருளாளர் கிஷோர் குமார், முன்னாள் அரசு வழக்கறிஞர் ஜெயராமன், செயற்குழு உறுப்பினர்கள் ஸ்ரீதேவி, சித்ரா எழிலரசி மற்றும் ஆனந்த் உள்ளிட்ட ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.ஆர்ப்பாட்டத்தில் வழக்கறிஞர்களுக்கு பாதுகாப்புஅளிக்க வேண்டும். வழக்கறிஞர் அழகேசன் மீது தாக்குதல் நடத்தியவர்களை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வேண்டும்.வழக்கறிஞர் பாதுகாப்பு சட்டத்தை இயற்ற வேண்டும் என்று பல்வேறு கோஷங்களை எழுப்பினார்கள்.



# ‘டெல்டா விவசாயிகளுக்கு இது கண்ணீர் தீபாவளி’ தஞ்சையில் கள ஆய்வு செய்த இபிஎஸ் ஆதங்கம்

தஞ்சாவூர், அக்.23-

டெல்டாவில் நெல் கொள்முதல் செய்யாததால் விவசாயிகளுக்கு இந்தாண்டு கண்ணீர் தீபாவளியாக இருந்தது என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. அறுவடை செய்த நெல்லை கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் விற்பனை செய்ய கொண்டு வந்து குவித்து வைத்துள்ளனர். கொள்முதல் நிலையங்களில் லாரிகள் முறையாக இயக்கம் செய்யப்படாததால், கொள்முதல் நிலைய ங்களில் நெல் மூட்டைகள் ஆயிரக்கணக்கில் தேங்கியுள்ளது.

அதே போல் தொடர் மழையின் காரணமாக சம்பா நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். நெல்லை உடனடியாக கொள்முதல் செய்யாததால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஈரப்பதம் அதிகரித்துள்ளதால் 22 சதவீதம் அளவுக்கு நெல் கொள்முதல் செய்ய வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி இன்று தஞ்சாவூர் அருகே காட்டூர், மூர்த்தியம்பாள்புரம் ஆகிய இடங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களை நேரில் பார்வையிட்டு, விவசாயிகளிடம் மழை பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, “விவசாயிகளின் துயர் துடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க அரசுக்கு வலியுறுத்துவேன். உடனுக்குடன் நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். நானும் ஒரு விவசாயி தான். அதனால் விவசாயிகள் படும் கஷ்டங்கள் எனக்கு அனைத்தும் தெரியும். விவசாயிகளின் கண்ணீர் துடைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்.

நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தினமும் 2,000 மூட்டைகள் கொள்முதல் செய்வதாக அரசு அறிவித்து இருந்தது. ஆனால், நேரடியாக விவசாயிகளிடம் கேட்ட போது வெறும் 800 நெல் மூட்டைகள் தான் கொள்முதல் செய்வதாக தெரிவிக்கின்றனர். தமிழக அரசு தவறான தகவலை கூறி விவசாயிகளை ஏமாற்றுகிறது, எனவே, விவசாயிகளுக்கு இந்த தீபாவளி கண்ணீர் தீபாவளியாக தான் உள்ளது’’ என்றார்.

# புனேவில் ரூ.66,000 செலவு செய்து விளைவித்த வெங்காயத்திற்கு ரூ.664 மட்டுமே பெற்ற விவசாயி

புனே, அக்.23-

மகாராஷ்டிராவின் புனே மாவட்டம், புரந்தர் பகுதியில் வெங்காயம் பயிரிட்டு வருபவர் சுதம் இங்லே. இவர் இந்த பருவத்தில் தனது வெங்காயப் பயிருக்கு சுமார் ரூ.66,000 செலவிட்டிருந்தார். ஆனால் இடைவிடாத மழையால் இப்பயிரின் பெரும் பகுதி சேதம் அடைந்தது. ஒரு பகுதியை மட்டுமே அவரால் காப்பாற்ற முடிந்தது.



எஞ்சிய வெங்காயத்தை சுதம் இங்லே கடந்த வெள்ளிக்கிழமை விற்பனைக்காக புரந்தர் சந்தைக்கு கொண்டு வந்தார். அங்கு 7.5 குவிண்டால் வெங்காயத்துக்கு அவருக்கு ரூ.1,729 மட்டுமே கிடைத்தது. இதில் போக்குவரத்து, சுமை கூலி, எடை போடுதல் உள்ளிட்ட செலவுகள் ரூ.1,065 போக அவருக்கு ரூ.664 மட்டுமே மிஞ்சியதால் அவர் அதிர்ச்சி அடைந்தார்.

உரமாக்க முடிவு: இதுகுறித்து சுதம் இங்லே கூறுகையில், “இது 1 ஏக்கர் நிலத்தில் விளைந்தது. இன்னும் ஒன்றரை ஏக்கர் நிலத்தில் வெங்காயம் உள்ளது. ஆனால் நான் அதை விற்க மாட்டேன். மாறாக வயலிலேயே அதை அழித்து அடுத்த ஆண்டுக்கு உரமாக மாற்றுவேன். இது விற்பதை விட லாபகரமானது. அரசு தலையிடவில்லை என்றால், விவசாயிகள் தற்கொலைகள் அதிகரிக்கும்’’ என்றார்.

ஆசியாவின் மிகப் பெரிய வெங்காய சந்தையான லாசல்கான் ஏபிஎம்சி.யில், விலை குவிண்டாலுக்கு ரூ.500 முதல் ரூ.1,400 வரை உள்ளது. கடந்த வாரம் தீபாவளிக்கு சந்தை மூடப்படுவதற்கு முன் ரூ.1,050 (1 கிலோ ரூ.10.50) என்ற அளவில் இருந்தது.

இதுகுறித்து ஏபிஎம்சி உறுப்பினர் ஒருவர் கூறுகையில், “இந்த ஆண்டு கோடையில் (மார்ச்-ஏப்ரல்) வெங்காய விளைச்சல் அபரிமிதமான இருந்தது. அப்போது அதிக விலை கிடைக்காத விவசாயிகள் அவற்றை இருப்பு வைத்து தற்போது விற்கின்றனர். தற்போது நாசிக் மாவட்டத்தில் 80% வெங்காய பயிர்கள் சேதம் அடைந்துவிட்டன. எஞ்சியவை தரம் குறைந்ததாக உள்ளன. எனவே அவற்றுக்கு விலை கிடைக்கவில்லை’’ என்றார்.

# தீபாவளி போனஸ் தராததால் அதிருப்தி: ஆக்ரா லக்னோ சுங்கச்சாவடியை திறந்துவிட்ட ஊழியர்கள்

ஆக்ரா, அக்.23-



தீபாவளி போனஸ் தராததால் அதிருப்தி அடைந்த சுங்கச்சாவடி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் மத்திய அரசுக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஆக்ரா லக்னோ எக்ஸ்பிரஸ் சாலையில் பதேஹாபாத் பகுதியில் சுங்கச்சாவடி உள்ளது. இங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு தீபாவளி போனஸ் வழங்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் அதிருப்தி அடைந்த ஊழியர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆக்ரா லக்னோ எக்ஸ்பிரஸ் சாலையில் சுங்கச்சாவடியை வாகனங்கள் கடப்பதற்கு வசதியாக அனைத்து கதவுகளையும் திறந்து விட்டனர்.

அதில் இருபுறமும் வாகனங்கள் அவசர அவசரமாக கடந்து செல்லும் காட்சிகள் அடங்கிய வீடியோ வைரலாயின. ஆக்ரா லக்னோ எக்ஸ்பிரஸ் சாலை மட்டுமன்றி டெல்லி செல்லும் யமுனா எக்ஸ்பிரஸ் சாலையையும் திறந்துவிட்டனர்.

சுங்கச் சாவடி ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் மத்திய அரசுக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் கூறும்போது, ‘‘நாங்கள் பல ஆண்டுகளாக பணிபுரிகிறோம். ஆனால், எங்களுக்கு எந்த போனஸ் வழங்கவில்லை. சம்பளத்தை கூட சரியான தேதியில் தருவதில்லை. இப்போது எங்களுக்குப் பதில் வேறு ஊழியர்களை பணியமர்த்த போவதாக நிறுவனம் கூறுகிறது’’ என்றனர்.

இதனிடையே, இந்த சுங்கச் சாவடியை நிர்வகிக்கும் சாய் மற்றும் ததார் நிறுவனம் சார்பில் போனஸ் வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்டதால் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

# டெல்டா மாவட்டங்களில் தொடர் மழை 1.30 லட்சம் ஏக்கர் இளம் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கி சேதம்

தஞ்சாவூர், அக்.23-

காவிரி டெல்டா மாவட்டங்களில் தொடர்மழை காரணமாக 1.30 லட்சம் ஏக்கர் இளம் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கியதாலும், அறுவடைக்கு தயாரான குறுவை நெற்கதிர்களை மழைநீர் சூழ்ந்ததாலும் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். டெல்டா மாவட்டங்களில் 6 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டது.



■ மயிலாடுதுறை அருகே கஞ்சாநகரம் பகுதியில் சம்பா நடவு செய்யப்பட்ட நெல் வயலில் ஏரிபோல தேங்கியிருக்கும் மழைநீர்.

இதில் 70 சதவீதம் அறுவடை பணிகள் முடிவடைந்துள்ளன. இன்னும் 30 சதவீதம் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இதில், அறுவடை செய்த நெல்லை விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்து வருகின்றனர். ஆனால், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் முறையாக இயக்கம் செய்யப்படாமல் தேங்கியுள்ளதால், கொள்முதல் பணிகளிலும் தேக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால், நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் காத்துக்கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், டெல்டா மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால், அறுவடைக்கு தயாரான குறுவை நெற்கதிர்களும், அண்மையில் நடவு செய்யப்பட்டுள்ள இளம் சம்பா பயிர்களையும் மழைநீரில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக, தஞ்சாவூர் மாவட்டம் சாலியமங்கலம், பூண்டி, நல்லவன்னியன் குடிகாடு, அம்மாபேட்டை, ஒரத்தநாடு, திருவையாறு, பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் அறுவடைக்கு தயாரான சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நெற்கதிர்கள் மழையால் சாய்ந்து நீரில் மூழ்கியுள்ளன.

இதேபோல, திருவாரூர் மாவட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கர் குறுவை நெற்கதிர்கள், மன்னார்குடி, வடுவூர், முத்துப்பேட்டை, கொரடாச்சேரி, திருவாரூர், காட்டூர் போன்ற பகுதிகளில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் இளம் சம்பா பயிர்கள், மயிலாடுதுறை மாவட்டத்தில் 500 ஏக்கர் குறுவை நெற்கதிர்கள், மயிலாடுதுறை, கொள்ளிடம், குத்தாலம் போன்ற பகுதிகளில் 10 ஆயிரம் ஏக்கர் இளம் சம்பா பயிர்கள், நாகை மாவட்டத்தில் தலையாமழை, கீராந்தி, சின்னதும்பூர், பெரிய தும்பூர், சோழவித்தியாபுரம், கிராமத்துமேடு, கருங்கண்ணி உள்ளிட்ட இடங்களில் 1,000 ஏக்கர் குறுவை நெற்கதிர்கள், கீழ் வேளூர், தலைஞாயிறு, வேதாரண்யம் போன்ற பகுதிகளில் சுமார் 1 லட்சம் ஏக்கர் இளம் சம்பாபயிர்கள் மழைநீரில் மூழ்கியும், சூழ்ந்தும் உள்ளன.

இந்த மழைநீர் வடிந்தால் மட்டுமே குறுவை நெற்கதிர்களை அறுவடை செய்ய முடியும். ஆனால் தொடர்ந்து மழை பெய்து வருவதால், வயல்களில் உள்ள தண்ணீரை வாய்க்கால்கள், வடிகால்கள் மூலம் வடிய வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இதனால், அறுவடைக்குதயாரான நெற்கதிர்களில் நெல்மணிகள் முளைத்துவிடும் என்பதாலும், இளம் சம்பாபயிர்கள் அழுகிவிடும் என்பதாலும் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

அடி மேல் அடி: தமிழக விவசாயிகள் சங்கத்தின் டெல்டா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ப.ஜெகதீசன் கூறியது: டெல்டா மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்ட 6 லட்சம் ஏக்கர் குறுவை பயிர்களில், 4.20 லட்சம் ஏக்கரில் அறுவடை முடிந்துள்ளது. ஆனால், அறுவடை செய்த நெல்லில் 20 சதவீத நெல் மணிகளை, கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்வதற்காக விவசாயிகள் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் தொடர்ந்து மழை பெய்வதால், நெல்லின் ஈரப்பதம் இயல்பாகவே அதிகமாக காணப்படுகிறது. இதனால் நெல்லை விற்க முடியாமல் விவசாயிகள் வேதனையில் உள்ளனர். மேலும், அறுவடை செய்யாமல் உள்ள நெற்கதிர்களையும், இளம் சம்பா பயிர்களையும் மழைநீர் சூழ்ந்துள்ளது. நெல் மணிகள் முளைத்துவிடும் என்பதாலும், இளம் சம்பா பயிர்களை அழுகிவிடும் என்பதால் விவசாயிகளுக்கு கவலை ஏற்பட்டுள்ளது என்றார்.



# சென்னையில் தீபாவளி பண்டிகையை ஒட்டி கடந்த 3 நாட்களில் 226 டன் பட்டாசு கழிவு அகற்றம்

சென்னை, அக்.23-

தீபாவளிப் பண்டிகையை ஒட்டி சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 3 நாட்களில் 225.87 டன் பட்டாசு கழிவு அகற்றப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

நடப்பு ஆண்டு தீபாவளிப் பண்டிகைக்கு வழக்கத்தை விட தமிழகத்தில் அதிகளவில் பட்டாசு விற்பனை நடந்துள்ளதாக பட்டாசு விற்பனையாளர்கள்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதை உறுதிப்படுத்தும் வகையில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் பட்டாசு வெடித்து சென்னை மக்கள் இந்த தீபாவளியை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கொண்டாடியுள்ளனர்.

அந்த வகையில் கடந்த அக்.19, அக்.20 மற்றும் அக்.21 ஆகிய 3 நாட்களில் சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டும் 225.87 டன் பட்டாசு கழிவுகளை சேகரித்து, அவற்றை பதப்படுத்தி அழிப்பதற்காக கும்மிடிப்பூண்டி மையத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் அதிகபட்சமாக வளசரவாக்கம் மண்டலத்தில் 24.08 டன் கழிவும், கோடம்பாக்கம் 20.45 டன், தேனாம்பேட்டை19.84 டன், திருவிக நகர்17.70 டன், தண்டையார்பேட்டை திருவொற்றியூரில் 17.33 டன், ஆலந்தூர் மண்டலத்தில் 13.09 டன், பெருங்குடி மண்டலத்தில் 12.33 டன், ராயபுரம் மண்டலத்தில் 11.95 டன் கழிவுகளும் மாநகராட்சி பணியாளர்களால் இரவு, பகலாக அகற்றப்பட்டுள்ளன. சென்னையில் மிக குறைந்தபட்சமாக அண்ணா நகரில் 7.18 டன பட்டாசு கழிவு சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# குமரியில் விடிய விடிய கனமழை திற்பரப்பு அருவியில் குளிக்க தடை

குமரி, அக்.23-

கன்னியாகுமரி மாவட்டத்தில் விடிய விடிய மழை கொட்டியது. திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதால் இன்று குளிக்க தடை விதிக்கப்பட்டது.



கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்திற்கு மேல் தொடர் மழை பெய்து வருகிறது. நேற்று இரவில் இருந்து விடிய விடிய பரவலாக மழை பெய்தது. குறிப்பாக திற்பரப்பு, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு மற்றும் மலையோர பகுதிகளில் கனமழை கொட்டியது.

அதிகபட்சமாக சிற்றாறு ஒன்றில் 55 மிமீ., மழை பதிவானது. பெருஞ்சாணியில் 47 மிமீ., சிவலோகத்தில் 46, திற்பரப்பில் 48, புத்தன்அணையில் 42, பேச்சிப்பாறையில் 41, களியலில் 40 மிமீ., மழை பெய்தது. மழையால் பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் இன்று 42 அடியாக உயர்ந்தது. அணைக்கு 874 கனஅடி தண்ணீர் உள்வரத்தாக வருகிறது. அணையில் இருந்து 477 கனஅடி தண்ணீர் வெளியேறுகிறது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 64.50 அடியாக உயர்ந்துள்ள நிலையில் அணைக்கு 745 கனஅடி தண்ணீர் வருகிறது. சிற்றாறு ஒன்றில் 6.72 அடியும், சிற்றாறு இரண்டில் 6.82 அடியும் தண்ணீர் உள்ளது.

மழையால் இன்று குமரி மாவட்டத்தில் மீன்பிடி பணிகள் பாதிக்கப்பட்டன. 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட படகுகள் கடலுக்கு செல்லவில்லை. இதைப்போல் தென்னை சார்ந்த தொழில், உப்பளம், செங்கல் சூளை, ரப்பர் பால்வெட்டுதல் உட்பட அனைத்து தொழில்களும் பாதிக்கப்பட்டன. மழையால் திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. இதனால் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு கருதி அருவியில் குளிக்க இன்று காலையில் இருந்து தடை விதிக்கப்பட்டது.

இன்றும் தமிழகத்தில் விடுமுறை விடப்பட்டிருந்ததால் கன்னியாகுமரியில் மழைக்கு மத்தியில் சுற்றுலா பயணிகள் வருகை அதிகமாக இருந்தது. அவர்கள் மழையால் பிற இடங்களுக்கு செல்லாமல் விவேகானந்தர் மண்டபம், திருவள்ளுவர் சிலை, கண்ணாடி பாலம் ஆகியவற்றிற்கு படகு பயணம் செய்ய ஆர்வம் காட்டினர். இதனால் கன்னியாகுமரியில் படகு இல்லத்தில் மட்டும் நீண்ட வரிசையில் சுற்றுலா பயணிகள் நின்றிருந்தனர்.

# புதுச்சேரியில் விடியவிடிய கனமழை: 11.84 செமீ பதிவு இந்திராகாந்தி சதுக்கத்தில் வடியாத வெள்ளம்

புதுச்சேரி, அக்.23-

விடிய விடிய பெய்த கனமழையால் புதுச்சேரியில் 11.84 செமீ மழை அளவு பதிவானது. மழை நின்றும் நகரின் முக்கியமான இந்திராகாந்தி சதுக்கத்தில் வடியாத வெள்ளத்தால் மக்கள் பாதிப்படைந்தனர்.



புதுவையில் கடந்த 16ம் தேதி முதல் வடகிழக்கு பருவமழை பெய்ய தொடங்கியுள்ளது. நேற்று அதிகாலை முதல் தொடர் மழை பெய்தது. பகல் பொழுதில் மட்டும் 2.86 செமீ மழை பதிவானது. மதியத்துக்கு பின் மழை பெய்யவில்லை. ஆனால் இரவில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. இதனால் புதுச்சேரி பள்ளி, கல்லூரிகளுக்கு புதன்கிழமை விடுமுறை விடப்பட்டது. இரவு 7 மணிக்கு மேல் சுமார் 3 மணி நேரம் தொடர்ந்து கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் நகரெங்கும் சாலைகளில் மழைநீர் தேங்கியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி குளம் போல நின்றது.

புதுச்சேரி நகரச் சாலைகள் வெள்ளக் காடானது. அதேபோல் கடலூர் மற்றும் விழுப்புரம் சாலைகளும் வெள்ளக்காடானது. தாழ்வான பகுதிகளில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் அந்தந்த பகுதி மக்கள் சிரமத்துக்கு ஆளாகினர். வீடுகளுக்குள் புகுந்த தண்ணீரை பொதுமக்கள் வாரி இரைத்து வெளியேற்றினர். தொடர்ந்து இரவு முழுவதும் அவ்வப்போது மழை கொட்டியது. இரவில் மட்டும் 11 செமீ மழை பதிவானது.

ஒட்டுமொத்தமாக 24 மணி நேரத்தில் புதுவையில் 14.7 செமீ மழை பதிவாகியது. மழை பாதிப்புகளை அறிந்த முதல்வர் ரங்கசாமி, நகரின் பல்வேறு இடங்களுக்கு காரில் சென்று மழை பாதிப்புகளை பார்வையிட்டார். மழைநீர் வெளியேற்றவும், பாதுகாப்புக்கு தேவையான நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இன்று அதிகாலை முதல் மழை இல்லை. இதனால் பெரும்பாலான சாலைகள், தாழ்வான பகுதிகளில் இருந்து மழை நீர் வெளியேறியது. வானம் வெறிச்சோடி காணப்பட்டு வெயில் அடிக்க தொடங்கியது. இதனால் சாலைகள் காய தொடங்கியது.

மழை நின்றும் இந்திராகாந்தி சதுக்கத்தில் வடியாத வெள்ளம்: நகரின் முக்கியப் பகுதியான இந்திராகாந்தி சதுக்கத்தில் கனமழை பெய்யும்போது முழங்கால் அளவுக்கு தண்ணீர் தேங்கி சாலைகளில் பெருக்கெடுத்து ஓடும். இதை தடுப்பதற்காக அண்ணா நகரில் வாய்க்காலை அகலப்படுத்தி பெரியவாய்க்காலுடன் இணைந்தனர்.

இதனால் மழைநீர் தேங்காது என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில் நேற்று இரவு விடிய, விடிய தொடர் கனமழை பெய்தது. இதில் நகரப் பகுதி முழுவதும் சாலைக ளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆனால் காலையில் மழை நின்றதும் பெரும்பாலான பகுதிகளில் மழைநீர் வடிந்தது. தாழ்வான பகுதிகளிலும் தேங்கிய மழைநீர் வெளியேறியது.

அதே நேரத்தில் இந்திராகாந்தி சதுக்கத்தில் நான்கு புறமும் தேங்கிய மழை வெள்ளம் வடியவில்லை. இதனால் அப்பகுதி வழியாக சென்ற வாகனங்கள் ஊர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்திராகாந்தி சதுக்கம் அருகே உள்ள பஸ்நிறுத்தத்தில் மழைநீர் தேங்கி நின்றது. அப்பகுதியில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. அப்பகுதியிலிருந்த வணிக நிறுவனங்களின் பார்க்கிங் பகுதியிலும் தண்ணீர் புகுந்திருந்தது.



# திருப்பூர் அவிநாசி நகர வீதிகளில் DYFI தூய்மை பணி பொதுமக்கள் பாராட்டு

திருப்பூர், அக்.23-

இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் அவிநாசி ஒன்றிய குழு சார்பில் தீபாவளி பண்டிகையால் குப்பை நிறைந்த அவிநாசி நகர வீதிகளை, தூய்மை பணியாளர்களுடன் இணைந்து வாலிபர் சங்க தோழர்கள், ஒன்றிய செயலாளர் ஆர்.வடிவேல் தலைமையில், சுகாதார ஊழியர் வீதி மற்றும் செல்லாண்டி அம்மன் கோவில் வீதிகளில் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். இதில் சங்கத்தின் ஒன்றிய பொருளாளர் ஆர்.தங்கராஜ், துணைச் செயலாளர் எஸ்.நந்தகோபால், துணைத் தலைவர் மகேந் திரன், கமிட்டி உறுப்பினர்கள் ராஜேஸ்வரி, ஜீவபாரதி, பத்ரான், பொறுப்பாளர் சி.பழனிசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## தூய்மை பணியாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் 400 நபர்களுக்கு திருப்பூர் மாநகராட்சி 25வது வார்டு அ.தி.மு.க. மாமன்ற உறுப்பினர் தங்கராஜ் புத்தாடை இனிப்புகள் வழங்கி கௌரவிப்பு

திருப்பூர், அக்.23-

தூய்மை பணியாளர்களுக்கும், அதிமுக கழக நிர்வாகிகளுக்கும் புதிய புத்தாடைகளை இனிப்புகளை வழங்கி கௌரவப்படுத்தினார்.

திருப்பூர் மாநகராட்சி 25வது வார்டு அ.தி.மு.க. மாமன்ற உறுப்பினர் மக்கள் சேவகர் A. தங்கராஜ். அவர்களின் துணைவியார் தவப்புதல்வர்கள் ஸ்ரீ தருண். தர்ஷனா. மற்றும் எம்ஜிஆர் இளைஞர் அணி பகுதி செயலாளர் ஜெயபிரகாஷ், மாவட்ட பிரதிநிதி வெள்ளியங்கிரி, வார்டு செயலாளர் ஆறுமுகம், வார்டு செயலாளர் மாணிக்கம், வார்டு துணைச் செயலாளர் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் தீபாவளி திருநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்..

# சின்னாளபட்டி பேரூராட்சி பகுதியில் டெங்கு மற்றும் மலேரியாவை கட்டுப்படுத்த கொசு ஒழிக்கும் புகை மருந்து அடிக்கும் பணி தீவிரம் : பொதுமக்கள் பாராட்டு

**அனைத்து வார்டுகளுக்கும் தினசரி காலை மற்றும் மாலை நேரங்களில் போக்கிங் மெசின் மூலம் கொசு ஒழிக்கும் புகைமருந்து அடிக்கப்படுகிறது செயல் அலுவலர் இளவரசி அறிவிப்பு**



சின்னாளபட்டி, அக்.23-

சின்னாளபட்டி பேரூராட்சி பகுதியில் தினசரி கொசுக்களை ஒழிக்கும் வகையில் கொசு ஒழிக்கும் புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. தினசரி காலை மற்றும் மாலை நேரங்களில் பேரூராட்சி பணியாளர்கள் ஆட்டோ மூலம் தெருத்தெருவாக கொசு ஒழிக்கும் புகை மருந்துகளை அடித்து வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி பேரூராட்சி பகுதியில் கொசுக்களை கட்டுப்படுத்தும் வகையிலும் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் பரவா வண்ணம் இருக்க சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிக்கும் புகை மருந்து ஆட்டோ மற்றும் பேட்டரி வாகனம் மூலம் தெருத்தெருவாக அடிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. காலை 7 மணி அளவில் பேரூராட்சி பணியாளர்கள் ஆட்டோக்களில் போக்கிங் மெஷின் வைத்து கொசு ஒழிக்கும் மருந்துகளை கலந்து மெஷின் மூலம் கொசுக்களை ஒழித்து வருகின்றனர். தினசரி ஒரு வார்டு வீதம் ஒவ்வொரு வார்டாக கொசு ஒழிக்கும புகை மருந்து அடிக்கப்பட்டு வருவதோடு கழிவு நீர்;கள் அதிகம் தேங்கும் பகுதிகளில் வாரம் இருமுறை கொசு ஒழிக்கும் மருந்துகளை அடித்து வருகின்றனர். இது குறித்து சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இளவரசி கூறுகையில் மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் உத்தரவின் பேரில் சின்னாளபட்டி நகர் முழுவதும் கொசுக்களை ஒழிக்கும் புகைமருந்து தீவிரமாக அடித்து வருகிறோம் இதுதவிர பொதுமக்கள் தினசரி வந்து செல்லும் மார்க்கெட் மற்றும் பேருந்து நிறுத்தம் பகுதிகளில் முன்னுரிமை கொடுத்து கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கப்படுகிறது என்றார். இதுதவிர குடிதண்ணீர் விநியோகம் செய்யும் இடங்களில் குளோரினேசன் முறையாக கலந்து பொதுமக்களுக்கு தண்ணீர்; விநியோகம் செய்யப்படுவதையும் கண்காணித்து வருகிறோம் என்றார்.

# சென்னைக்கு திரும்பிய மக்களால் விக்கிரவாண்டி சுங்கச்சாவடி ஸ்தம்பித்தது

விழுப்புரம், அக்.23-

தீபாவளி விடுமுறை முடிந்து தென்மாவட்டங்களில் இருந்து சென்னைக்குத் திரும்பிய மக்களால் விக்கிரவாண்டி சுங்கச்சாவடி ஸ்தம்பித்தது. தொடர் விடுமுறை காரணமாக சென்னையில் இருந்து லட்சக்கணக்கானோர் பேருந்து, ரயில், கார், வேன் மற்றும் இருசக்கர வாகனங்களில் கடந்த 17ம் தேதி முதல் 19ம் தேதி நள்ளிரவு வரை சொந்த ஊருக்குச் சென்றனர்.

குறிப்பாக, சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சுங்கச்சாவடி வழியாக சுமார் 1.60 லட்சம் வாகனங்களில் பல லட்சம் மக்கள் கடந்து சென்றனர். இந்நிலையில், தீபாவளி விடுமுறை முடிந்ததால் தென்மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு நேற்று முன்தினம் முதல் பொது மக்கள் திரும்பத் தொடங்கினர்.

அந்த வகையில் விக்கிரவாண்டி சுங்கச்சாவடியை நேற்று முன்தினம் 17 ஆயிரம் வாகனங்கள் கடந்த நிலையில் நேற்று பகல் 12 மணிக்கு பிறகு வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. 8 பாதைகள் வழியாகவும் வாகனங்கள் அனுமதிக்கப்பட்டன. இரவு 9 மணி வரை சுமார் 40 ஆயிரம் வாகனங்கள் சுவங்கச் சாவடியை கடந்துள்ளதாக கூறப்படுகிறது.

மழையால் வாகனங்கள் வேகமாக இயக்கப்படவில்லை. இதனால் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நெரிசல் ஏற்பட்டது. விழுப்புரம் மேல வீதியில் நெரிசல் காரணமாக புறவழிச்சாலை வழியாக போக்குவரத்து திருப்பி விடப்பட்டது. மேலும், மாவட்டத்தில் 6 இடங்களில் நடைபெற்று வரும் மேம்பால கட்டுமான பணியால் சர்வீஸ் சாலை வழியாக வாகனங்கள் இயக்கப்பட்டதால் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் இளைஞர் பெருமன்றம் சார்பாக ஆதரவற்ற குழந்தைகளுக்கு புத்தாடை வழங்கும் நிகழ்ச்சி-தலைவர் மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது

**நம்ம பிரியாஸ், தேனிஆனந்தம் ஜவுளி கடைக்கு அழைத்து வந்து ஆதரவற்ற குழந்தைகளுக்கு புத்தாடை வழங்கினார்கள்**





சின்னாளபட்டி, அக்.23-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் இளைஞர் பெருமன்றம் சார்பாக ஆதரவற்ற குழந்தைகளுக்கு புத்தாடை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தலைவர் மாரிமுத்து தலைமையில் திண்டுக்கல் நம்ம பிரியாஸ், தேனி ஆனந்தம் ஜவுளி கடைக்கு அழைத்து வந்து ஆதரவற்ற குழந்தைகளை அழைத்து வந்து புத்தாடை வழங்கினார்கள்.

திண்டுக்கல் குரும்பபட்டியில் அமைந்துள்ளது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் இளைஞர் பெருமன்றம் இதன் தலைவராக ஆ.மாரி முத்து உள்ளார். செயலாளராக சதீஸ்குமார், பொருளாளராக சுமதியும், உதவி பொருளாராக வீரமணியும், உதவி செயலாளராக ஜெகதீசனும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பெருமன்றத்தில் செயல்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு வருடமும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு புத்தாடைகள் வழங்கி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி வருகின்றனர். இவ்வருடம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு திண்டுக்கல் ஊராட்சி பகுதியில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் 25பேரை தேர்ந்தெடுத்து திண்டுக்கல் நம்ம பிரியாஸ் மற்றும் தேனி ஆனந்தம் ஜவுளி கடைக்கு அழைத்து சென்று அவர்களுக்கு பிடித்த புத்தாடைகளை வாங்கி கொடுத்து இனிப்புகள் வழங்கி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள். தங்களுக்கு புத்தாடைகள் மற்றும் இனிப்புகள் வழங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் இளைஞர் பெருமன்ற தலைவர் மாரிமுத்துவை குழந்தைகள் அனைவரும் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர்.

# நெல் மூட்டைகள் தேங்க மத்திய அரசின் காலதாமதமே காரணம்: தஞ்சையில் அமைச்சர் சக்கரபாணி விளக்கம்



தஞ்சாவூர், அக்.23-

“விவசாயிகளிடம் பெறப்பட்ட நெல்லில், அரிசி அரவையின் போது கலக்கப்பட வேண்டிய செறிவூட்டப்பட்ட அரிசி வழங்க மத்திய அரசு அனுமதி அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் தான் நெல் மூட்டைகள் தேங்க காரணம்.” என தமிழக உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி விளக்கமளித்துள்ளார்.

தஞ்சாவூர் பிள்ளையார்பட்டி நெல் சேமிப்பு கிடங்கில் தமிழக உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் பார்வையிட்டு இன்று காலை ஆய்வு செய்தனர்.

பின்னர் அமைச்சர் அர.சக்கரபாணி செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் இந்த ஆண்டு வரலாற்றில் இல்லாத வகையில் நெல் விளைச்சல் அதிகம். தஞ்சாவூர் மாவட்டத்தை பொருத்தவரையில் இந்த ஆண்டு 299 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதுவரை 1.06 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இன்னும் 50 ஆயிரம் மெ.டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட வேண்டி உள்ளது.

இந்த ஆண்டு சாகுபடி பரப்பு கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளது. தினமும் 1,250 லாரிகளில் வெளி மாவட்டங்களுக்கு நெல்மூட்டைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும் ரயில் வேகன்கள் மூலமும் நெல் மூட்டைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. 16 லட்சம் சாக்குகள் கையிருப்பு உள்ளது. இன்னும் 66 லட்சம் சாக்குகள் வரவேண் டியுள்ளது. சணல் இருப்பும் போதிய அளவில் கையிருப்பு உள்ளது.

விவசாயிகளிடம் பெறப்பட்ட நெல்லில், அரிசி அரவையின் போது கலக்கப்பட வேண்டிய செறிவூட்டப்பட்ட அரிசி வழங்க மத்திய அரசு அனுமதி அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் தான் நெல் மூட்டைகள் தேங்க காரணம்.

அதாவது 100 கிலோ அரிசியில் 1 கிலோ செறிவூட்டப்பட்ட அரிசி கலக்க வேண்டும். இதற்கான விதிமுறைகளை மாற்றி கடந்த 2972025 அன்று மத்திய அரசிடம் இருந்து தமிழக அரசுக்கு கடிதம் வந்தது. பின்னர் டெண்டர் விடப்பட்டு 5 ஒப்பந்தக்காரர்கள் மூலம் விவசாயிகளிடம் பெறப்பட்ட 34 ஆயிரம் டன் நெல்கள் வாங்கிய நிலையில் அவற்றில் 100 கிலோ அரிசிக்கு 1 கிலோ வீதம் செறிவூட்டப்பட்ட அரிசி கலக்க வேண்டியுள்ளது. இதற்காக அந்த ஒப்பந்ததாரர்கள் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு டெல்லிக்கு அரிசியை அனுப்பியுள்ளனர்.

டெல்லியில் உள்ள குவாலிட்டி கண்ட்ரோல் அதிகாரிகள் அதனை கம்ப்யூட்டரில் ஆய்வு செய்து அவர்கள் அறிக்கை தந்த பிறகு தான் செறிவூட்டப்பட்ட அரிசி கலக்க முடியும். இதுவரை மத்திய அரசிடம் இருந்து அந்த அனுமதி வரவில்லை. அனுமதி வந்த பிறகு செறிவூட்டப்ட்ட அரிசி கலக்கப்பட்டு விடும். எனவே நெல் மூட்டைகள் தேங்கியது. இதற்கு மத்திய அரசுதான் காரணம். இது தெரியாமல் எதிர்க்கட்சித் தலைவர் கே.பழனிசாமி ஏதேதோ பேசி வருகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

செறிவூட்டுதல்: ‘நாம் உண்ணும் உணவின் ஊட்டச்சத்துத் தரத்தை மேம்படுத்தும் வகையில், தேவையான நுண்ணூட்டச் சத்துக்களின் உள்ளடக்கத்தைத் திட்டமிட்ட வகையில் அதிகரிப்பதே’ செறிவூட்டல் என இந்திய உணவுப் பாதுகாப்பு, தர நிர்ணய ஆணையம் (FSSAI) வரையறை செய்துள்ளது. இந்த அரிசியில் இரும்பு, ஃபோலிக் அமிலம், வைட்டமின் பி12 ஆகிய ஊட்டச்சத்துகள் செயற்கையாக ஏற்றப்படும்.

வைட்டமின்கள், தாதுக்கள் உள்ளிட்ட பல நுண்ணூட்டச் சத்துப்பொருள்கள் கொண்ட செயற்கையான செறிவூட்டும் கலவை (பிரிமிக்ஸ்) இதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வேதிப்பொருள் கலவையும், மாவாக்கப்பட்ட அரிசியும் சேர்க்கப்படும். பிறகு, இந்த மாவு அரிசி வடிவில் மீண்டும் இயந்திரங்களில் வார்த்தெடுக்கப்படுகிறது. சாதாரண அரிசியுடன் 100:1 என்ற விகிதத்தில் இந்தச் செறிவூட்டப்பட்ட அரிசி மணிகள் கலக்கப்படுகின்றன.

# குருவாயூர் கோயில் பொக்கிஷங்களுக்கு முறையான ஆவணங்கள் இல்லை: தணிக்கை அறிக்கையில் அம்பலம்



திருவனந்தபுரம், அக்.23-

கேரளாவில் உள்ள குருவாயூர் கோயிலுக்கு சொந்தமாக தங்கம், வெள்ளி ஆபரணங்கள், பாத்திரங்கள், தந்தம், பக்தர்கள் காணிக்கையாக அளிக்கும் பொருட்கள் அதிகளவில் உள்ளன. ஆனால், இந்த பொக்கிஷங்களுக்கான ஆவணங்கள் சரியாக பராமரிக்கப்படாததால், முறைகேடுகளுக்கான வாய்ப்பு அதிகம் உள்ளது என குருவாயூர் தேவசம் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

குருவாயூர் தேவசம் வாரியத்தின் புன்னத்தூர் கோட்டா சரணாலயத்தில் கடந்த 201920ம் ஆண்டு அறிக்கையில் 522.86 கிலோ தந்தம் மற்றும் தந்தப் பொருட்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டப்படி தந்தம் வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு ஒப்படைக்கப்படவில்லை என வனத்துறை அதிகாரி தெரிவிக்கிறார்.

கோயிலுக்குள் இருக்கும் தங்கம் மற்றும் வெள்ளி பொருட்கள் குறித்த பதிவேடுகளை ஆய்வு செய்தபோதும் அதில் பல குறைகள் உள்ளன. கோயில் உபயோகத்துக்காக பயன்படுத்தப்பட்ட தங்கம் வெள்ளி பொருட்களின் எடைகள் குறைவாக உள்ளன. கோயிலில் இருந்த தங்க கிரீடம், வெள்ளி ஆபரணமாக மாற்றப்பட்டுள்ளது. கோயிலில் இருந்த 2.65 கிலோ வெள்ளி பாத்திரத்துக்கு பதில் 750 கிராம் எடையுள்ள பாத்திரம் மாற்றப்பட்டுள்ளது. இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குருவாயூர் தேவசம் சட்டம் 1978 மற்றும் 1980ம் ஆண்டு விதிமுறைகள் படி கோயில் பொக்கிஷங்கள் ஆண்டு தோறும் சரிபார்க்கப்பட வேண்டும் என்பது கட்டாயம். ஆனால் அதுபோன்ற சரிபார்த்தல் நடவடிக்கை கடந்த 40 ஆண்டுகளாக நடைபெறவில்லை என தணிக்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 30ம் தேதிக்குள் கோயில் பொக்கிஷங்கள் ஆய்வு செய்யப்பட்டு தேவசம் வாரிய ஆணையரிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்ற உத்தரவும் பின்பற்றப்படவில்லை.



## திருவாரூரில் நெற்பயிர் சேதம்; நெல் கொள்முதல் நிலைய இயக்கம் சுணக்கம் இபிஎஸ் நேரில் ஆய்வு

திருவாரூர், அக்.23-

திருவாரூர் மாவட்டத்தில் மழையால் பாதித்த நெற்பயிர்களை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

திருவாரூர் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக கடந்த தீபாவளி தொடங்கி தொடர் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, அறுவடை செய்யும் நிலையி லிருந்த குறுவை நெற்பயிர்கள் அறுவடை செய்ய முடியாமல் வயல்வெளிகளிலேயே சாய்ந்து முளைக்கத் தொடங்கியுள்ளன.

நெல் கொள்முதல் நிலையங்களிலும் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்டு வைக்கப்பட்ட நெல் மூட்டைகள் இயக்கம் செய்யப்படாத காரணத்தால், கொள்முதல் நிலையங்களில் வாசல்களிலேயே விவசாயிகளின் தற்போதைய குறுவை அறுவடை நெல் கொள்முதல் செய்யாமல் செயற்கையாக தேக்கி வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் விவசாயிகளின் நெல் தொடர் மழையில் நனைந்து குவியல், குவியல்களாக கிடக்கின்றன. இதனால், விவசாயிகள் மத்தியில் பெரும் கவலை ஏற்பட்டுள்ளது. அதுபோல், திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை நடவு செய்யப்பட்ட ஒரு லட்சத்து 35 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஆன இளம் சம்பா பயிர்களில் பெரும்பாலான நெற்பயிர்கள் மழை நீரால் சூழப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளை சந்திக்கவும், மழையால் பாதிக்கப்பட்டுள்ள குறுவை நெற்பயிர்களையும், மழை நீரால் சூழப்பட்டுள்ள இளம் சம்பா சாகுபடி பயிர்களை பார்வையிடவும் தமிழக எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான கே. பழனிசாமி இன்று திருவாரூர் மாவட்டத்துக்கு வருகை தந்து பல்வேறு இடங்களில் பார்வையிட்டு விவசாயிகளையும் சந்தித்தார்.

அவருடன் முன்னாள் அமைச்சர் ஆர். காமராஜ் உள்ளார். இதற்காக இன்று காலை வடுவூர், செருமங்கலம், தேவங்குடி, ரிஷியூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகளை சந்தித்த பின்னர், திருவாரூரில் செய்தியாளர்களை இன்று மதியம் சந்திக்க உள்ளார்.

## செம்பரம்பாக்கம் ஏரி நிரம்புகிறது கரையோர மக்களுக்கு எச்சரிக்கை



சென்னை, அக்.23-

சென்னைக்கு குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் 21 அடியாக உயர்ந்ததால் செங்கை, காஞ்சி, திருவள்ளூர் ஆகிய 3 மாவட்ட கரையோர மக்களுக்கு முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது. 100 கன அடி உபரிநீர் மதகுகள் வழியே வெளியேற்றப்பட்டு வருவதால் யாரும் அடையாறு ஆற்றுக்குள் இறங்கவோ, வீடியோ எடுக்கவோ கூடாது என்று நீர்வளத் துறையினரும் மாவட்ட நிர்வாகத்தினரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஏரி மொத்தம் 25.51 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடையது. ஏரியின் மொத்த உயரம் 24 அடியாகவும், அதன் நீரின் முழு கொள்ளளவு 3,645 மில்லியன் கன அடியாகவும் உள்ளது. மழை தொடர்ந்து பெய்து வருவதால் அலுவலர்கள் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ஒரு முறை நீரை அளவீடு செய்து வருகின்றனர். மேலும், தற்போது அதிகப்படியான நீர் வந்து கொண்டிருப்பதால் இன்று ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்காக முதல் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்பு நேற்று மாலை மதகுகளின் வழியே 100 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது.

கனமழை எச்சரிக்கை: சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி நேற்று உருவானது. அது நேற்றே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்று மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்தது. இன்று தென்மேற்கு மற்றும் அதையொட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில், வடதமிழக புதுவை தெற்கு ஆந்திர கடலாரப் பகுதிகளுக்கு அப்பால் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும். அடுத்த 24 மணி நேரத்தில் மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுவடையக் கூடும்.

இன்று விழுப்புரம், செங்கல்பட்டு, கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் புதுவையில் சில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் சில இடங்களில் கன முதல் மிக கனமழையும், சேலம், திருச்சி, வேலூர், திருப்பத்தூர், தருமபுரி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரோட்டராக்ட் கிளப் ஆஃப் கோயம்புத்தூர் யுனிக் முன்னெடுப்பில், ஹெல்மெட் பாதுகாப்பு சாலை ஒழுக்க விழிப்புணர்வு பேரணி

கோவை, அக்.23-

ரோட்டராக்ட் கிளப் ஆஃப் கோயம்புத்தூர் யுனிக் முன்னெடுப்பில், கோயம்புத்தூர் மாவட்ட அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கம் இணைந்து, ட்ருஹோம் ஃபைனான்ஸ் மற்றும் எலிக்சிர் ஃபௌண்டேஷன் ஆதரவுடன், ஹெல்மெட் பாதுகாப்பும் சாலை ஒழுக்கமும் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பேரணி, கோவை நகர காவல்துறையின் முழு ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்றது.

கோயம்புத்தூர் ரேஸ் கோர்ஸில், கோயம்புத்தூர் மாவட்ட அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகள் நல சங்கத்துடன் இணைந்து, ரோட்ராக்ட் கிளப் ஆஃப் கோயம்புத்தூர் யுனிக், ஒரு தனித்துவமான சாலை பாதுகாப்பு மற்றும் சமூக உள்ளடக்க நிகழ்வை செப்டம்பர் 21, 2025ல் ஏற்பாடு செய்தது. TrueHome Finance மற்றும் Elixir Foundation ஆகியவற்றின் தாராள ஆதரவுடன் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.



கோயம்புத்தூர் நகர காவல்துறையின் முழு ஆதரவுடன் நடத்தப்பட்ட இந்த முயற்சி, பொதுமக்களிடையே ஹெல்மெட் பாதுகாப்பு மற்றும் சாலை ஒழுக்கத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. இந்த நிகழ்ச்சியில் 140க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர், இதில் 100 மாற்றுத்திறனாளிகள் ஹெல்மெட் வழங்கப்பட்டு, பாதுகாப்பான மற்றும் பொறுப்பான சவாரி பற்றிய செய்தியை பரப்பும் வகையில் 4 கி.மீ விழிப்புணர்வு பேரணியை நிறைவு செய்தனர்.

கோயம்புத்தூர் நகர காவல் உதவி ஆணையர் (கிழக்கு போக்குவரத்து) எம். திருநாவுக்கரசு, இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, ஹெல்மெட் பயன்பாட்டின் முக்கியத்துவத்தையும் போக்குவரத்து விதிகளை



கடைபிடிப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி ஒரு சக்திவாய்ந்த உரையை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வை குறிப்பாக தாக்கத்தை ஏற்படுத்தியது, சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்ட சிலர் உட்பட, பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் பங்கேற்றது. சாலைப் பாதுகாப்பைப் புறக்கணிப்பதால் ஏற்படும் நிஜ வாழ்க்கை விளைவுகளை நினைவூட்டும் விதமாக அவர்களின் வருகை அமைந்தது, ஹெல்மெட்களை ஒரு விருப்பமாக இல்லாமல் ஒரு முக்கிய பாதுகாப்பாக அங்கீகரிக்க பங்கேற்பாளர்களைத் தூண்டியது.

இந்த நிகழ்விற்கு Rtr. கங்காதரன் தலைமை தாங்கினார், Rtr. கிருஷ்ணா பிரஜ்வின் தலைவராகவும், Rtr. கிரிஷிவ் காமேஷ்வர் ரோட்டராக்ட் கிளப் ஆஃப் கோயம்புத்தூர் யூனிக்கின் செயலாளராகவும் பணியாற்றினார். கோவை மாவட்ட அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கத்தைச் சேர்ந்த கன்னியப்பன் (தலைவர்) மற்றும் ஹேமா ஹரிதாசன் (செயலாளர்), தன்னார்வ சேவை அமைப்புகளின் கூட்டமைப்பைச் சேர்ந்த கோவிந்தராஜ் ஆகியோருடன் சேர்ந்து நிகழ்ச்சியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தனர்.

## திருச்சியில் பரபரப்பு சம்பவம் : வாலிபரை தாக்கி இரு சக்கர வாகனம் திருட்டு மர்ம ஆசாமிக்கு வலைவீச்சு

திருச்சி, அக்.23

திருச்சி கருமண்டபம் சமத்துவ நகரை சேர்ந்தவர் சுகுமார் (வயது 39) இவர் தீபாவளி அன்று திருச்சி ரெயில்வே ஜங்ஷன் பகுதியில் உள்ள ஒரு அரசு மதுபான கடையில் மது வாங்கி குடித்துக் விட்டு தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது

ரெயில்வே ஜங்ஷன் எதிரில் அவரை வழிமறித்த மர்ம ஆசாமி ஒருவர் சுகுமாரை தாக்கி அவர் சட்டை பாக்கெட்டில் இருந்த ரூபாய் 500 பணத்தை திருடிக் கொண்டு சுகுமாரை கீழே தள்ளிவிட்டு அவருடைய இருசக்கர வாகனத்தை திருடிக் கொண்டு அங்கிருந்து ஓடி விட்டார். இது குறித்து சுகுமார் கண்டோன்மென்ட் குற்றப்பிரிவு போலீசில் புகார் கொடுத்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து இருசக்கர வாகனத்தை திருடி சென்ற மர்ம ஆசாமியை வலை வீசி தேடி வருகின்றார். இந்நிலையில் திருட்டுப் போன இருசக்கர வாகனம் திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் கரூர் பைபாஸ் சாலை பகுதியில் அனாதையாக நிறுத்தி வைக்கப்பட்டத்தை கண்டுபிடித்து

போலீசார் அங்கு சென்று இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து கண்டோன்மென்ட் குற்றப்பிரிவு போலீசார் வழக்குப் பதிவு செய்து மர்ம ஆசாமியை வலைவிசி தேடி வருகின்றனர்.



## திருமலையில் மழை வாகன ஓட்டிகள் அவதி

திருமலை, அக்.23-

திருப்பதி மற்றும் திருமலையில் கடந்த 3 நாட்களாக ஓயாமல் மழை பெய்து வருகிறது. இதனால் வெளியூர்களில் இருந்து சுவாமி தரிசனம் செய்ய திருமலைக்கு வந்த பக்தர்கள் அறைகளிலேயே தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது மலைப்பாதையில் 15வது வளைவில் நிலச்சரிவு ஏற்பட்டு, பாறைகள் சாலையில் வந்து விழுந்தன. எனினும் இதில் அசம்பாவிதம் ஏதும் ஏற்படவில்லை. இந்த நிலச்சரிவால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் வாகன ஓட்டிகள் அவதியுற்றனர்.

## சென்னை விமான நிலையத்தில் பட்டாசு புகை சூழ்ந்து 15 விமானங்களில் சேவை பாதிப்பு

சென்னை, அக்.23-


சென்னை விமான நிலையத்தில் பட்டாசு புகை சூழ்ந்ததால் 15 விமானங்களில் சேவை சிறிதளவு பாதிக்கப்பட்டது. தீபாவளி அன்று சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தைச் சுற்றி உள்ள பகுதிகளில் அதிக அளவிலான பட்டாசுகள் தொடர்ச்சியாக வெடிக்கப்பட்டன. இதனால் எழுந்த புகையால் காற்றில் மாசு ஏற்பட்டது.

இதனால், சென்னை விமான நிலையத்தில் ஒடு பாதை பகுதியில் புகை மண்டலம் சூழ்ந்தது. இதையடுத்து விமான வருகை, புறப்பாட்டுக்கு சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறையில் கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கட்டுப்பாட்டு அறையில் இருந்த அதிகாரிகள், தரையிறங்க வந்த விமானங்களுக்கு உடனடியாக அனுமதி கொடுக்காமல், ஓடுபாதைகளைக் கண்காணித்து, ஓடுபாதை தெளிவாகத் தெரிந்தால் மட்டுமே விமானங்கள் தரையிறங்க அனுமதித்தனர்.

அது வரையில் விமானங்களை தொடர்ந்து வானில் வட்டமடித்து பறக்கச் செய்தனர். அதேபோல், சென்னையி ல் இருந்து புறப்பட வேண்டிய விமானங்களுக்கும் உடனடியாக புறப்பட சிக்னல் கொடுக்காமல், ஓடுபாதையை கண்காணித்து, ஓடுபாதை தெளிவாகத் தெரிந்தால் மட்டுமே விமானங்கள் ஓடுபாதையில் ஓடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இதனால், சென்னையில் தரையிறங்க வந்த, ஹைதராபாத், குவஹாட்டி ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் மற்றும் லக்னோ, மதுரை, டெல்லி, பெங்களூர், டாக்கா பகுதிகளிலிருந்து வந்த இண்டிகோ ஏர்லைன்ஸின் 7 விமானங்கள் நீண்ட நேரம் வானில் வட்டமடித்து பறந்த பின்னர் தரையிறங்கின.

சென்னையிலிருந்து புறப்பட வேண்டிய டெல்லி, கொச்சி, பெங்களூரு, கோவை, ஹைதராபாத், தோகா, கோலாலம்பூர் ஆகிய இண்டிகோ ஏர் லைன்ஸ் விமானங்கள், ஹைதராபாத் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் தாமதமாக புறப்பட்டுச்சென்றன. பட்டாசு புகை மண்டலத்தால் மொத்தமாக சென்னை விமான நிலையத்தில் 7 வருகை விமானங்கள், 8 புறப்பாடு விமானங்களின் சேவை சிறிதளவு பாதிக்கப்பட்டது.




■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்திய மாபெரும் கல்விக் கடன் முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு கல்விக்கடன் உதவிகளுக்கான காசோலையினை வழங்கினார்.

## தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடக்கம்: தினசரி மின்தேவை 11 ஆயிரம் மெகாவாட்டாக குறைவு

சென்னை, அக்.23-

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில், தினசரி மின் தேவை 11 ஆயிரம் மெகாவாட்டாகக் குறைந்துள்ளது. தமிழகத்தில் தினசரி மின் தேவை சராசரியாக 16 ஆயிரம் மெகாவாட் என்ற அளவில் உள்ளது. கோடைகாலத்தில் 20 ஆயிரம் மெகாவாட் அளவுக்கு அதிகரிக்கும். அதிகபட்சமாக கடந்த 2024 ஆண்டு மே 2ம் தேதி தினசரி மின் தேவை 20,830 மெகாவாட்டாகப் பதிவானது.

இந்தாண்டு அதிகபட்சமாக கடந்த ஏப்.24ம் தேதி 20,148 மெகாவாட் மின் தேவை பதிவானது. கோடை காலத்தில் வெயிலின் தாக்கம் காரணமாக மின் தேவை எப்படி அதிகரிக்கிறதோ, அதேபோல், மழை மற்றும் குளிர் காலங்களில் மின்சாரப் பயன்பாடு குறைந்து, மின் தேவையும் குறைவது வழக்கம்.

மின்நுகர்வு 10,923 மெகாவாட்: இந்நிலையில், தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை கடந்த 16ம் தேதி தொடங்கியது. இதனால், தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. மழை காரணமாக மின் தேவையும் குறைந்துள்ளது. கடந்த 19ம் தேதி மின் தேவை 12,557 மெகாவாட்டாகவும், 20ம் தேதி தீபாவளி அன்று 10,923 மெகாவாட்டாகவும் இருந்தது.

இதுகுறித்து மின் வாரிய அதிகாரிகள் கூறியதாவது: தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருவதால் மின்சாரப் பயன்பாடு கணிசமாகக் குறைந்துள்ளது. பொதுவாக, பருவமழையின் போது மின் பயன்பாடு 50 சதவீதம் குறையும். மேலும் தீபாவளியையொட்டி கடந்த 3 நாட்கள் தொடர் விடுமுறை என்பதால் பெரும்பாலான அலுவலகங்கள், தொழிற்சாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. இதனால் மின் நுகர்வு குறைவாக இருந்தது.

50% உற்பத்தியே போதுமானது: பொதுவாக, தமிழகத்தில் சென்னை நகரில் அதிகபட்ச மின் தேவை இருக்கும் நிலையில், பலர் சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளதால் சென்னையின் மின்தேவை குறைந்துள்ளது. தற்போதுள்ள சூழலில், அனல் மின் நிலையம் மற்றும் பிற மின் உற்பத்தி நிலையங்களில் 50 சதவீத உற்பத்திகூட மின்தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## புனே பேஷ்வா கோட்டையில் முஸ்லிம் பெண்கள் தொழுகை: கோமியம் தெளித்து இந்துத்துவாவினர் போராட்டம்



புதுடெல்லி, அக்.23-

மகாராஷ்டிர மாநிலம் புனேவின் சனிவார் வாடாவில் வரலாற்று சிறப்புமிக்க பேஷ்வாவின் கோட்டை அமைந்துள்ளது. இதனுள் முஸ்லிம் பெண்கள் தொழுகை நடத்தும் வீடியோ கடந்த ஞாயிறு அன்று வெளியானது.

புனேவின் பாஜக மாநிலங்களவை உறுப்பினர் மேதா குல்கர்னி தனது சமூக ஊடகப் பக்கத்தில் இந்த வீடியோவை பதிவேற்றம் செய்திருந்தார். வரலாற்று பாரம்பரியம் அவமதிக்கப்பட்டு விட்டதாகவும் குறிப்பிட்டு, போராட்டங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

சனிவார் வாடா வளாகத்தின், பிரார்த்தனை தளத்தில் கோமியம் மற்றும் பசுஞ் சாணம் தெளித்து புனிதப்படுத்த அவர் அழைப்பு விடுத்தார். அவர் இந்துத்துவாவினருடன் இணைந்து தீவிரப் போராட்டத்தில் இறங்கினார். குல்கர்னி தலைமையிலான இப்போராட்டத்தில் பல வேறு இந்து அமைப்பினர் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர். அவர்கள் கோமியம் தெளித்து, சிவபெருமானுக்கு பிரார்த்தனை செய்து, பிரார்த்தனைப் பகுதியை புனிதப்படுத்தினர். ‘சனிவார் வாடா இந்துக்களுடையது, அது பேஷ்வாக்களின் பெருமை’ என கோஷங்களை எழுப்பினர்.

சனிவார் வாடாவுக்கு வெளியே அமைந்துள்ள ஹஸ்ரத் காஜா சையத் தர்கா அருகே இந்துத்துவாவினர் போராட்டம் நடத்த முயன்றனர். போலீசார் தடியடி நடத்தி போராட்டகாரர்களை விரட்ட முயன்றனர்.

இதுகுறித்து புனே காவல்துறை துணை ஆணையர் கிருஷ்ணகேஷ் ராவலே கூறும்போது, ‘சனிவார் வாடா மகாராஷ்டிராவின் வரலாற்றுச் சின்னம். எந்த மதத்தின் மத நிகழ்வுகளும் இங்கு நடத்தப்படக் கூடாது. சனிவர் வாடா இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் உள்ளது. எனவே, அத்துறையுடன் ஆலோசித்த பிறகு மேல் நடவடிக்கை எடுக்கப்படும்’ எனத் தெரிவித்தார்.

பாஜக எம்பி குல்கர்னியின் நடவடிக்கையை, மகராஷ்டிராவின் எதிர்க்கட்சிகள் கடுமையாக கண்டித்துள்ளன. துணை முதல்வரான அஜீத்பவாரின் தேசியவாதக் காங்கிரஸ் கட்சி, குல்கர்னி மீது வழக்கு பதிவு செய்ய வலியுறுத்தியது.

இந்துமுஸ்லீம் இடையே பதற்றத்தைத் குல்கர்னி தூண்டி வருகிறார் என என்சிபி தலைவர் ரூபாலி தோம்பரே தெரிவித்தார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000